**பக்கம் எண்.1**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 238/2023**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06ம் நாள் திங்கள் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.S.குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **செல்வமணி** | **தொழில் :** | வீட்டு குடித்தனம் |
| கணவர் **பெயர் :** | **சோமு** | **சமயம் :** | – |
| **ஊர் :** | சூரப்பள்ளம் | **வயது** | 67 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**06.04.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற வாதிகளுக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 14.11.1960 தேதியிட்ட நடேச வேளாளர் மற்றும் வீரப்ப வேளாளர் ரெங்க வேளாளரிடமிருந்து தாவா சொத்தினை கிரையம் பெற்ற கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 15.05.1962 ல் நடேச வேளாளர் மற்றும் வீரப்ப வேளாளருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். 02.03.2023 தேதியிட்ட 01.03.1987 – 01.03.2023 கணினி வில்லங்கசான்று சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். உட்பிரிவு செய்து வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யகோரி வாதியால் பட்டுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்ட மனு நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன்.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி கேட்டுக்கொண்தற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.